**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.96/2024 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | செல்வி |
| க/பெ. | பழனி |
| வயது | 60 |
| வசிப்பிடம் | எண்.266, நந்தா மெஜஸ்டிக் அவன்யூ, ஆத்தூர் கிராமம், செங்கல்பட்டு. |
| தொழில் | வீட்டு நிர்வாகம் |

**முதல் விசாரணை 22.07.2026**

செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர் கிராமம், நந்தா மெஜஸ்டிக் அவன்யூ, எண்.266-ல் குடியிருக்கும் செல்வி க/பெ.பழனி, வயது 60 ஆகிய நான் இந்த வழக்கில் முதல் மனுதாரர். 2வது மனுதாரரான எனது மகளுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1. 09.06.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1.
2. 09.06.2023 தேதியிட்ட உடறகூராய்வு அறிக்கை ம.சா.ஆ.2 (ஆட்சேபனையுடன்).
3. 25.07.2023 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் கணினி நகல் ம.சா.ஆ.3.
4. 06.07.2024 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் கணினி நகல் ம.சா.ஆ.4.
5. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆர்.சி.புத்தகம் நகல் ம.சா.ஆ.5.
6. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீட்டு நகல் ம.சா.ஆ.6.
7. முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின் உரிமம் நகல் ம.சா.ஆ.7.
8. முதல் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.8 (அசலுடன் சரிபார்க்கப்பட்டது)
9. 2வது மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.9.
10. முதல் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.10 (அசலுடன் சரிபார்க்கப்பட்டது)

11. 2வது மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.11.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் இறந்துபோன பழனியின் மனைவி நான் தான். 2வது மனுதாரர் என்னுடைய மகள். வேறு யாரும் வாரிசுகள் இல்லை. என் மகளுக்கு திருமணம் ஆகி 5 ஆண்டுகள் ஆகிவிட்டது. அவர் காஞ்சிபுரத்தில் அவரது கணவருடன் வசித்து வருகிறார். 09.06.2023 அன்று என் கணவர் விபத்து இறந்து போனார். இரவு பணிக்கு சென்றுவிட்டு மறைமலைநகரில் இருந்து செங்கல்பட்டிற்கு வந்துக்கொண்டிருந்த போது மறைமலைநகர் ரயில்வேஸ்டேசன் அருகில் வந்தபோது பின்னால் இருவர் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று நின்றுக் கொண்டிருந்தார். அதை நான் நேரில் பார்க்கவில்லை, அவருடன் வந்த நபர்கள் சொல்லி எனக்கு மேற்படி விவரம் தெரியும்.

2. சம்பவ இடத்திலேயே என் கணவர் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக என்னுடைய மகள் தாம்பரம் போக்குவரத்து காவல் நிலையத்தில் புகார் அளித்து அதன் அடிப்படையில் போலீசார் விசாரித்தார்கள். எந்த வாகனம் என் கணவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது என்றால் அந்த விவரம் என் மகளுக்கு தெரியும். இந்த விபத்து குறித்து குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2-ல் சாட்சியம் அளித்தேன். அந்த ஓட்டுநர் மீது போடப்பட்ட வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் செக்யூரிட்டியாக வேலை செய்து மாதம் ரூ.12,000/- பெற்றதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

3. என் கணவர் இறக்கும் போது அவரது வயது 64 என்றால் சரிதான். ம.சா.ஆ.4 வாரிசு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள என் கணவரின் பெற்றோர்கள் என் கணவர் இறப்பதற்கு முன்பே இறந்து விட்டார்கள். என் கணவர் ரயில்வே ஸ்டேசன் செல்வதற்காக மறைமலைநகர் பேருந்து நிலையத்தில் இருந்து கிழக்கில் இருந்து மேற்காக சென்றார் என்றால் சரிதான். அந்த இடம் 4 வழி சாலை என்றால் சரிதான். விபத்து நடந்தது செங்கல்பட்டில் இருந்து சென்னை நோக்கி வரக்கூடிய சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் பொது மக்கள் சாலையை கடப்பதற்காக

ஏற்படுத்தப்பட்ட இடம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் இருபுறமும் சாலையை சரிவர பார்க்காமல் கவனக்குறைவோடு கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4. முதல் எதிர்மனுதாரர் வாகனத்தை சாலை விதிகளை மதித்து ஓட்டி வந்தபோது என் கணவரின் தவறால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அதிகமான இழப்பீடு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இழப்பீடு தொகை கேட்க வேண்டுமென்பதற்காக இந்த ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை